RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22456

OPEN ACCESS

# தொல்காப்பியரின் உள்ளுறைக் கோட்பாடும் பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களும்

**த. விக்னேஷ்வரன் [அ, *], கி. மணிமாறன் [அ]**

[அ] தமிழ்த்துறை உயராய்வு மையம், அரசர் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருவையாறு, தஞ்சாவூர்-613204, தமிழ்நாடு, இந்தியா

# Tholkappiyar's Latent Theory and Eighteen Lesser Texts

**T. Vigneshwaran [a, *], K. Manimaran [a]**

[a] Department of Tamil, Rajah's College, (Affiliated in Bharathidasan University) Thiruvaiyaru, Thanjavur-613204, Tamil Nadu, India

* Corresponding Author: vigneshwarant@gmail.com

Received: 30-06-2022
Revised: 24-09-2022
Accepted: 05-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil language is divided into two dialects, the world dialect and the poetic dialect. All the words in this language have meanings. The subject will be explicit and specific. A series is made up of words. The phrase does not stand at its own point but expresses a different meaning. There is a lot of positive meaning in this way. They are referential interpretation in fewer places. Words and phrases convey meaning both at the internal and external levels. When it expresses external views, it is called referential and referential. In the case of the subject, the object of reference is indicated by two technical terms, latent and meat. Both are specific to internal songs. Scholars interpret these by citing the internal poems of the Sangam literature. Like the Sangam literature, the internal literature of the post-Sangam period occupies a special place. They are based on Kurinji and other tinais. This article is intended to examine the meaning of the poems from the point of view of the latent theories of Tolkappiar.

**Keywords:** Tholkappiyar, Sangam literature, Words, Phrases, Dialects, Kurinji

## முன்னுரை

உலக மொழிகளுள் தனிச்சிறப்பு உடையது தமிழ்மொழி, இது இலக்கிய வரலாற்றைப் போலவே இடையறாத இலக்கண வரலாற்றையும் உடையது. இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தமிழ்மொழியைப் பற்றி அல்லாமல் தமிழர்தம் வாழ்வியலையும் எடுத்துக்காட்டும் நூல்களுள் தனித்தன்மை உடையது. இந்நூல் மொழி, இலக்கியக் கோட்பாடு, சமுதாய நிலை என்பன போன்ற பன்முகத் தன்மைகளை வெளிப்படுத்துவதாய் விளங்குகிறது. தொல்காப்பியர் பண்டைத் தமிழரின் வாழ்க்கை நெறியினை அகம், புறம் என இரண்டாகப் பகுத்துப் பேசுகிறார். அவற்றுள் பொது வாழ்க்கையாகிய புறத்தை வெட்சி முதலான ஏழ் திணைகளில் வைத்து விளக்குகிறார். அகம் என்னும் குடும்ப வாழ்வியலைக் களவு, கற்பு என்னும் இருபெரும் கூறுகளாகப் பகுத்துரைக்கிறார். இவ்வக வாழ்க்கையைக் குறிஞ்சி முதலான ஐந்து திணைகளில் வைத்து விளக்குகிறார். அவ்ஜந்திணைகளுள் ஒன்றை இனம்காண்பதற்கு முதல், கரு, உரி என்கின்ற மூன்று பொருள்கள் முதன்மைப்படுத்தப் படுகின்றன. அவற்றிற்கு மேலாகத் திணையை உணர்வதற்கு அடிப்படையாய் இருப்பவை உள்ளுறை உவமை, ஏனை உவமை என விளக்கம் தருகிறார். அவற்றுள் சிறந்ததாக விளங்குவது உள்ளுறை

பற்றிய கோட்பாடாகும். இது சங்க மருவிய கால அகத்திணைப் பாடல்களுள் பொருந்தியுள்ள திறத்தை ஆராய்ந்து உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

### சங்க, சங்க மருவிய கால அக இலக்கியங்கள்

சங்க இலக்கியத் தொகுப்பில் மிகுதியான பாடல்கள் அகப்பொருள் பற்றியவை. நிரல்படுத்தப்படாமல் ஐந்திணைகளும் விரவிக் கிடக்கின்ற நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்கின்ற மூன்றுமாகும். கலித்தொகையும் ஐங்குறுநூறும் தனித்தனியே வரிசைப்படுத்தப்பட்ட திணைப் பாடல்களைக் கொண்டவை. இவ்விரு நூல்கள் ஒவ்வொன்றும் ஐந்து புலவர்களால் பாடப்பட்ட தொகுப்பு நூலாகும். சங்க மருவிய காலத்தில் இயற்றப்பட்டவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். இவற்றுள் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார்நாற்பது ஆகிய ஆறும் அகநூல்கள். கார்நாற்பது நீங்கலாக எஞ்சியவை தனித்தனிப் புலவர்களால் ஐந்து திணைகளையும் வரிசைப்படுத்திப் பாடப்பட்ட சிறப்புக் கொண்டவை. ஒரு புலவரே ஐந்து திணைகளையும் பாடியுள்ளதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். கார்நாற்பது முல்லைத் திணையை மட்டும் பாடிய நூலாக விளங்குகிறது.

## திணை அறியும் முறை

அக இலக்கியங்கள் அனைத்தும் திணைசார் இலக்கியங்களாகும். அக ஒழுக்கத்தைக் கூறும் ஒரு பாடல் இன்ன திணையைச் சார்ந்தது என்பதை அறிவதற்கு மிகவும் இன்றியமையாதவை முதல், கரு, உரி என்னும் முப்பொருள்கள் ஆகும். இவற்றைத் தொல்காப்பியர்,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவலும் காலை முறைசிறந் தனவே

பாடலுள் பயின்றவை நாடும் காலை"

என்னும் நூற்பாவழிக் குறிப்பிடுகிறார் (Ilampuranar, 1975). இதற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர், "யாதானும் ஒரு செய்யுற்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉமாம்" என உரைவிளக்கம் தருகிறார் (Ilampuranar, 1975). இம்முப்பொருள்களுக்கு மேலாகத் தொல்காப்பியர் உவமம் வாயிலாகத் திணை உணரும் முறையையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அவ்உவமையானது உள்ளுறை உவமை, ஏனை உவமை என இரண்டு வகைப்படும் எனவும் கருத்துரைக்கிறார். இவற்றுள் அகத்திணையை உணர்வதற்கு மிகவும் இன்றியமையாததாய் விளங்குவது உள்ளுறை ஆகும்.

## உள்ளுறை

உவமைகளுள் ஏனை உவமம் என்பது வினை, பயன், மெய், உரு என்கின்ற நான்கன் அடிப்படையில் உவம உருபுகளோடு அமைவது. இவ்வுவமை, பாடல்களில் இயல்பாக உணரும் வகையில் பயின்று வருவதாகும். வெளிப்படையாகக் கண்ட பொருளைக் கொண்டு காணாத பொருளை ஒப்பிட்டுக் காட்டுவது வெளிப்படை உவமை. இது அகம், புறம் என்னும் இரண்டற்கும் பொதுவாக வரும். இவ்வுவமை எப்பொருள் பற்றியும் வருவதாகும். உள்ளுறை என்பது அகப்பொருளுக்கு மட்டும் பொருந்தி வருகின்ற உவமை வகையாகும். தெய்வம், உணவு, விலங்கு முதலான கருப்பொருள்களுள் தெய்வம் நீங்கலாக எஞ்சிய பொருள்களின் அடிப்படையில் தோன்றுவதாகும். வெளிப்படையாகச் சொல்லப்படும் உவமை வடிவமான சொல்தொடரினுள் பிறிதோர் பொருள்கொள்ளக் கிடப்பது உள்ளுறையாகும். இதன் இலக்கணத்தையும் அடிப்படைப் பொருள்களையும் தொல்காப்பியர்.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்

கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே"

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன

உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"

என்னும் நூற்பாக்கள் எடுத்துரைக்கின்றன (Sivalinganar, 1985). வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளின் உள்ளே உறையும் பொருளாதலால் உள்ளுறை என்பது காரணப் பெயராகும். இவ்வுள்ளுறையை ஆ.சிவலிங்கனார், "அகத்திணைப் பாடலுக்கே உரியதாய்க் கருப்பொருள்களை நிலைக்களன்களாகக் கொண்டதாய் அக்கருப்பொருளால் வெளிப்படையாக உணர்த்தப்படும் பொருளினுள்ளே உய்த்துணருமாறு அமைவதாய் உள்ள பொருளே உள்ளுறையாம்" என விளக்கம் தருகின்றார். (Sivalinganar, 1985) உள்ளுறைக்குரிய இலக்கணத்தை,

உள்ளுறை உவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்

புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்"

என நம்பியகப்பொருள் (நூற்பா.238) எடுத்துரைக்கிறது. உள்ளுறையின் இன்றியமையாமையைக் கருப்பொருளால் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இல்லையாயின் அச்செய்யுளின் கருத்து முற்றுப் பெறாமலும் நன்கு விளங்காமலும் நிற்கும் என்கிறார் நா. சுப்பையா பிள்ளை (Subbaiya Pillai, 1970).

## திணைமாலை நூற்றைம்பதும் உள்ளுறையும்

அகப்பொருளுக்கே உரியதாக விளங்கும் உள்ளுறை உவமையினைத் திணைமாலை நூற்றைம்பது மிகச் சிறப்பாக விளக்குகிறது. இல்லறத்தை நல்லறமாகப் போற்றியவன் தலைவன். அவன் அந்நிலையிலிருந்து மாறிப் பரத்தையர் பிரிவை மேற்கொண்டான். இதனைத் தலைவி உள்ளுறையின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றாள். பெரிய கொம்பினையும் சிவந்த கண்களையும் கொண்டது எருமைமாடு. அது வயல்களில் விளைந்துள்ள மென்மையான கரும்புகளைக் கால்களால் துவைத்தது. அரிய கொம்புகளால் ஆம்பல் மலர்களை நீக்கிவிட்டுக் குவளை மலர்களைத் தின்று அசை போட்டுக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுவதைக்,

"கருங்கோட்டுச் செங்கண் எருமை கழனி

இருங்கோட்டு மேன்கரும்பு சாடி - அருங்கோட்டால்

ஆம்பல் மயக்கி அணிவளை ஆர்ந்துஅழகாம்

தாம்பல் அசையினவாய் தாழ்ந்து"

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது (Thirunansambantham, 2010). இப்பாடலில் ஓர் எருமையின் செயல் காட்டப்படுகிறது. இப்பாடல் தொடர் ஓர் உள்ளுறை உவமையாகும். தலைவனின் புறத்தொழுக்கத்தைத் தலைவி மருத நிலக் கருப்பொருள்களில் ஏற்றிப் பொருந்தும்படி இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ள எருமை - தலைவன்; மென்கரும்பு - தலைவி; ஆம்பல் - தோழியர்; குவளை - பரத்தையர் எனப் பொருத்திப் பார்க்க இது உள்ளுறை உவமமாய்ச் சிறப்படைந்தது. இவ்வாறு உள்ளுறை கூறுதலை இக்கால உலக வழக்கில் பொடி வைத்துப் பேசுதல், சாடை காட்டி இடித்துரைத்தல் எனப் பலவாறு கூறுவர். வெளிப்படையாகக் கூற முடியாதவற்றை உள்ளுறையால் உணர்த்தும் பழக்கம் ஏற்படுகிறது. தலைவனை அவனது தவறான ஒழுக்கம் காரணமாக வெளிப்படையாக இடித்துப் பேசமுடியாதவிடத்து இவ்வாறு உள்ளுறையாகக் கூறும் வழக்கம் தோன்றலாயிற்று என்னும் தமிழண்ணல் கூற்றும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கதாகும் (Thamizhannal, 2001).

செங்கண் கருங்கோட்டு எருமை சிறுகனையால்

அங்கண் கழனிப் பழனம்பாய்ந்து - அங்கண்

குவளையும் பூவொடு செங்கயல்மீன் சூடித்

தவளையுமேல் கொண்டு வரும். (பா.147)

என்னும் பாடலும் தலைமகன் பரத்தையர் பிரிவை மேற்கொண்ட நிலையில் தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்தது. எருமையாகிய தலைவன் கரும்பாகிய தலைவியை விட்டுக் குவளைப்பூ, மீன், தவளை போன்ற அஃறிணைப் பொருள்களை ஒத்த பரத்தையரைச் சார்ந்து வாழ்ந்ததைக் குறிப்பிடுகிறது. இப்பாடலில் எருமை, கரும்பு, குவளை, மீன், தவளை ஆகியவை மருதநிலைக் கருப்பொருள்களாகும்.

இருள்நடந்தது அன்ன இருங்கோட்டு எருமை

மருள்நடந்த மாப்பழன மாந்திப் - பொருள்நடந்த

கற்பெருங் கோட்டால் கனைத்துத்தம் கன்றுஉள்ளி

நெற்போர்வு சூடி வரும் (பா.148)

இப்பாடல் தலைவனின் பரத்தையர் பிரிவைக் கூறியது. இதில் இடம்பெற்ற எருமை குவளையைத் தின்று கற்களைக் கொம்புகளால் பெயர்த்து நெற்கதிரைக் குத்தி வைக்கோலைத் தாங்கித் தன்கன்றை நினைத்துக் கனைத்த செய்தி கூறப்படுகிறது. இது மருத நிலத் தலைவனுக்குரிய செயல்களாக உள்ளுறைந்து காணக்கிடப்பதால் உள்ளுறையாயிற்று.

## கைந்நிலையும் உள்ளுறையும்

கைந்நிலையில் அமைந்த சில பாடல்கள் உள்ளுறை பொதிய அமைக்கப்பட்டுள்ளன. களவு வாழ்க்கையை மேற்கொண்ட தலைவன் அவளைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் கடத்துகிறான். அதனால் பொறுக்கமுடியாத தலைவி தன்நிலையைத் தோழிக்குக் கூறும் முறையில் உள்ளுறை பொதிந்துள்ளது. பாசி படர்ந்த பசுமையான நீர்ச்சுனையிலிருந்து நீர் வழிகிறது. அந்நீரின் வழியே வரும் பழங்களை எடுத்து மிகக் கோபம் கொண்ட குரங்குகள் சுவைத்துத் தின்கின்றன. பாசி தோன்றும்படி நீர் ஓடும் உயர்ந்த கற்களை உடையது இக்குறிஞ்சி நிலம். இம்மலைநாட்டுத் தலைவனை எண்ணி என்மனம் காதலால் வருந்துகிறது என்பது இப்பாடலின் பொருளாகும். இதில் பாசிப் பசுஞ்சுனை - குறவர்குடி; வழிகின்ற நீர் - தலைவி பிறந்தவீடு; நீரில் வரும் கனி - தலைவி; அக்கனியை ஆண்குரங்கு தின்னுதல் - தலைவன் தலைவியைக் கூடி மகிழ்தல் எனக் குறிஞ்சித்திணைக் கருப்பொருள்களின் மீது ஏற்றிக் கூறியதால் இது உள்ளுறை உவமம் ஆயிற்று. குறிஞ்சித் திணையில் அமைந்த இவ்வுள்ளுறையைப்,

பாசிப் பசுஞ்சுனைப் பாங்கர் அழிமுதுநீர்

காய்சின மந்தி பயின்று கனிசுவைக்கும்

பாசம்பட் டோடும் படுகல் மலைநாடற்கு

ஆசையில் தேம்புமென் நெஞ்சு. (பா.3)

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது. மேலும் கழனி உழவர் எனத் தொடங்கும் மருதத்திணைப் பாடல் (பா.37) உள்ளுறை உவமை பொருந்துமாறு அமைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

திணை என்பது அகப்பொருளைப் பொறுத்தவரை ஓர் அகப்பாடலின் மொத்தக் கட்டமைப்பையும் உணர்த்தும் நிலையில் அமைவது. ஒரு பாடல் இன்ன திணை என அறிவதற்கு முப்பொருள்களுள் ஒன்று அடிப்படையாய் அமையும். அதற்கு மேலாகத் திணையை அறிவதற்கு உறுதுணைபுரிவது உள்ளுறையாகும். இவ்வுள்ளுறை என்பது நயத்தையும் சுவையையும் மிகுதிப்படுத்தி ஒரு பாடலைக்

கலைப்படைப்பாக மாற்றும் ஆற்றல் கொண்டது. ஒன்றுபோலச் சிந்திக்கும் ஆற்றலை மாற்றி நுணுக்கமாகப் பல்பொருள் காணும் திறமுடையது இவ்வுள்ளுறை ஆகும். திட்பமும் நுட்பமும் செறிந்த இவ்விலக்கியப் புலப்பாட்டு நெறியைச் சங்க மருவிய கால அக இலக்கியங்களாகிய திணைமாலை நூற்றைம்பதும் கைந்நிலையும் மிகச் சிறப்பாகப் போற்றுகின்றன.

## References

Ilampuranar, (1975) Tholkappiyam Porulathikaram, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Sivalinganar, A. (1985) Tholkapiyar Kurum Ulluraiyum Eraichiyum, Ulaga Tamil Kalvi Iyakam, Chennai, India

Subbaiya Pillai, N. (1970) Tholkapiyach Selvam, Muthaiah Nilayam, Chennai, India

Thamizhannal (2001) Indiya Ilakiyach Sirpikal Tholkapiyar, Sahitya Academy, Chennai, India

Thirunansambantham, S. (2010) Agaporul Vilakam, Kathir Pathippagam, Thiruvaiyaru, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License